**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.**

**STC.No. 1082 / 2022**

**DW– 1**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 07–ம் நாள் சனிக் கிழமை எதிரி தரப்பின் 1–வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு–3ன் படி 07.03.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அசோகன் | **தொழில்** | தனியார் நிறுவனம் |
| **தந்தை பெயர்** | ராமபிள்ளை | **வசிப்பிடம்** | கீழ்சிறுப்பாக்கம் |
| **வயது** | 45 | **தாலுக்கா** | |

**முதல் விசாரணை:**

1) நான் இந்த வழக்கின் எதிரியாவேன். புகார்தாரர் என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் புகார்தாரரின் தந்தை பத்மநாபன் என்பவரிடம் 2018, 2019 வருடத்திலிருந்து தொடர்ந்து சீட்டு கட்டி வந்தேன். என்னால் இடையில் சீட்டு பணம் கட்ட முடியாமல் போய்விட்டது. பத்மநாபன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் செந்தில்குமார் ஊராட்சி மன்ற தலைவர் மூலம் என்னிடம் பேச வேண்டும் என்று கூறி ஊராட்சி மன்ற தலைவர் அழைத்ததின் பேரில் 2022 ம் வருடம் மாதம் மற்றும் தேதி ஞாபகமில்லை, ஒருநாள் சென்றிருந்தேன். நான் சீட்டு பணம் செலுத்த வேண்டும் என்றும், அதனால்தான் பத்மநாபன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்று கூறி மேற்படி பத்மநாபன் என்பவரை என் வீட்டிலேயே கொண்டு வந்து விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு ஊர் பஞ்சாயத்தார்கள் பேசி நான் கொடுக்க வேண்டிய தொகை ரூ.3 லட்சத்தை பத்மநாபனுக்கு கொடுப்பதாக உறுதி அளித்தேன். அதன்பின்னர் அவ்வப்போது ரூ.10 ஆயிரம், 20 ஆயிரம் என்று தொகைகளை என்னிடம் இருந்து பத்மநாபன் என்பவரின் மகள் பாரதி மற்றும் மருமகன் ரமேஷ் பெற்றுச்சென்றுள்ளார்கள்.

2) பின்னர் பத்மநாபனின் மகனான இவ்வழக்கின் புகார்தாரர் செந்தில்குமார் வேலாயுதம் என்பவரை அறிமுகப்படுத்தி அவரிடம் நான் பணம் கொடுக்க

வேண்டும் என்று கூறினார். நான் மேற்படி வேலாயுதம் என்பவருக்கு ரூ.150000/- கொடுத்துவிட்டேன். பஞ்சாயத்து தலைவர் பொன்பாண்டுரங்கன் என்பவர் நான் மீதத்தொகை கொடுக்க வேண்டி இருப்பதால் அதற்கு பொறுப்பிற்காக காசோலை ஒன்று கொடுக்க வேண்டும் என்று கூறி ஒரு காசோலையை வாங்கி புகார்தாரரிடம் கொடுத்தார்கள். பிறகு நான் 4 மாதம் கழித்து மீதத்தொகையை கொடுப்பதாக கூறியிருந்தேன். மொத்தத்தில் நான் 2 லட்சத்து 45 ஆயிரம் தொகையை கொடுத்துவிட்டேன். பின்னர் பத்மநாபன் என்பவர் இறந்துவிட்டார்.

3) புகார்தாரர் என்னுடைய காசோலையை வங்கியில் செலுத்துவதற்கு முன்பு என்னிடம் எதுவும் கேட்கவில்லை. காசோலை திருப்பப்பட்ட பின்பு எனக்கு அறிவிப்பு வந்தது. நான் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பை குறித்து வழக்கறிஞரிடம் கேட்டபோது பதில் ஏதும் கூறவில்லை. அதனால் நான் வேறு வழக்கறிஞரை மாற்றிவிட்டேன். அதற்கிடையில் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார். நான் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.55 ஆயிரம் மட்டும் பாக்கி உள்ளது, அதை நான் அவருக்கு திரும்ப கொடுத்துவிடுகிறேன்.

(புகார்தாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டிதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது).